நெல்லை மாநகராட்சி வர்த்தக மையத்தில் நடைபெற்று வரும் 8 வது பொருநை புத்தகத் திருவிழா 9 ம் நாள் நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் – நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பங்கேற்று தனது சொந்த நிதியிலிருந்து பள்ளி கல்லூரி மாணவ,மாணவியர் களுக்கு பல்வேறு தலைப்பில் கொண்ட 1000 ம் நூல்களை மாவட்ட ஆட்சியர் மருத்துவர் இரா.சுகுமாரிடம் வழங்கினார். உடன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ்,கிறிஸ்தவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார் மற்றும் பணியாளர்கள் நல வாரிய தலைவர் விஜிலா சத்யானந்த் உள்பட பலர் உள்ளனர்.

திருவண்ணாமலை

தூய்மை அருணைப் பணிகள் - அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவு!

திருவண்ணாமலை, பிப்.11

திருவண்ணாமலையில் வாரந்தோறும் நடைபெறும் தூய்மை அருணை பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டு ஆய்வு செய்தார். கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்றிட உத்தரவிட்டார்.

திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல் பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக்கணக்கானோர் மரம் நடுதல், பராமரித்தல், கால் வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

கிரிவலப்பாதையில் உள்ள 20 குளங்களை தூய்மை அருணை அமைப்பு மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் சீரமைப்பது என தீர்மானிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

09.02.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7.00 மணிக்கு, திருவண்ணாமலை நகரில் நடைபெறும் தூய்மைப் பணிகள், நடப்பட்ட மரக்கன்றுகளை பராமரிக்கும் பணி ஆகியவற்றை பொதுப்பணித் துறை அமைச்சரும், தூய்மை அருணையின் அமைப்பாளருமான எ.வ.வேலு பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

காலை 7.00 மணிக்கு திருக்கோயிலூர் ரோடு, ஆண்கள் மேல்நிலைப்பள்ளியை சுற்றியுள்ளப் பகுதிகளில் கால்வாய் அடைப்பு, மரக் கன்றுகள் பராமரிப்பதை பார்வையிட்டு, பொதுப்பணித்துறை அமைச்சர் பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கினார்.

காலை 7.15 மணிக்கு, வார்டு எண்.38 ஆடுதொட்டித் தெருவில் நடைபெற்று வரும் கால்வாய் அடைப்பு, மண்மேடு அகற்றுதல்,

காலை 7.30 மணிக்கு, வார்டு எண்.36 கல் நகர் பகுதியில் மண்மேடுகள் மற்றும் கால்வாய் தூர்வாரும் பணியினை பார்வையிட்டும்,

காலை 7.45 மணிக்கு, வார்டு எண்.37 கோபால் தெருவில் நடைபெறும் தூய்மைப் பணிகள்,

காலை 8.00 மணிக்கு, வார்டு எண்.17 இராமலிங்கனார் மெயின் தெருவில் நடைபெறும் கால்வாய் அடைப்பு புதர்மேடுகளை அகற்றுதல்,

காலை 8.15 மணிக்கு, வார்டு எண்.12 கட்டபொம்மன் தெருவில் நடைபெற்று வரும் கால்வாய் தூர்வாரும் பணி,

காலை 8.30 மணிக்கு, வார்டு எண்.11 கார்கானாத் தெரு பகுதியில் நடைபெறும் கால்வாய் தூர்வாரும் பணியும், மரக்கன்றுகளை பராமரிக்கும் பணியினையும் பார்வையிட்டு, பொதுப்பணித்துறை அமைச்சரும், அமைப்பாளருமான எ.வ.வேலு ஆலோசனைகளை வழங்கினார். ஆய்வின்போது கால்வாய் ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றிட அலுவலர்களுக்கு உத்திரவிட்டார்.

தூய்மைப் பணியில் தூய்மை அருணையின் மேற்பார்வையாளர்கள் டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என். அண்ணாதுரை.எம்.பி., இரா. ஸ்ரீதரன், ப.கார்த்தி வேல்மாறன், ப்ரியா ப.விஜயரங்கன், ஒருங்கிணைப்பாளர்கள் அ.கோவிந்தன், செ. எழில்மாறன், எஸ்.கண்ணதாசன், ஏ.ஏ.ஆறுமுகம், ம. வினோத் குமார், எஸ்.கே.டி.வீரா, வழக்கறிஞர்கள் ம.செந்தில், கிருஷ்ணமூர்த்தி, பா.அரிகிருஷ்ணன், சு.ராஜாங்கம், வழக்கறிஞர் ந.சீனுவாசன், இரா.அருண், மெட்ராஸ் கே.சுப்பிரமணி, காலேஜ் கு.ரவி, கே.காளிதாஸ், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பி.ஆர்.நாகராஜ், கு.குமார், மண்டி.பிரகாஷ், மு.கருணாமூர்த்தி, இரா.ராஜாமணி, அ.திவாகர், அ.பழனி, கே.பிரகாஷ், பி.ஜி. முருகன், கோபி.சங்கர், சென்னை.சுரேஷ், முபாரக், லயன்.ஷெரீப். கா.ஏழுமலை, எஸ்.ஜாகீர், இரா.ஜோதி, கு.தியாகு, மூ.காமேஷ், ஹக்கிம்சேட், சி.கே.சசிக்குமார், கோல்டு.எஸ்.பிரபு மற்றும் மாட வீதி ஒருங்கிணைப்பாளர்கள் இல.குணசேகரன், சினம்.பெருமாள், ஆர்.கே.பி. பாஸ்கர், ஜீவரேகா விஜயராஜ், அருணை.வெங்கட் உட்பட ஆயிரக்கணக்கான தூய்மைக் காவலர்களும் கலந்து கொண்டனர்.

மத்தியில் ஆட்சி மாற்றத்தை கொண்டுவரக்கூடிய ஒரே முதல்வர் திராவிடமாடல் ஆட்சி நாயகர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் ஒருவரே என்று நிலக்கோட்டையில் பட்ஜெட்டில் தமிழகத்தை புறக்கனித்ததை கண்டித்து நடைபெற்ற கண்டன பொதுகூட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார். அருகில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி. செந்தில்குமார், மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, கழக பேச்சாளர்கள் ஆம்பூர் தர்மன், ஈரோடு இளையகோபால், கிழக்கு மாவட்ட துணைச்செயலாளர்கள் ஆ.நாகராஜன், மார்க்கிரேட்மேரி பிலால் உசேன், பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் மணிகண்டன், கரிகால பாண்டியன், சௌந்தரபாண்டியன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–3 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெறுகிறது. முதல் கட்டமாக இராணிப்பேட்டை மற்றும் காஞ்சிபுரம் வடக்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

நாள்	நேரம்	கழக மாவட்டம்	இடம்
11.02.2025 செவ்வாய்க்கிழமை	மாலை 4.00 மணி	இராணிப்பேட்டை	எஸ்.கே. மஹால், இராணிப்பேட்டை
12.02.2025 புதன்கிழமை	காலை 9.00 மணி	காஞ்சிபுரம் வடக்கு	கார்த்திக் பேலஸ் மண்டபம், குன்றத்தூர் – மாங்காடு சாலை, சிக்கராயபுரம்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 09-02-2025

பேரறிஞர் அண்ணா 56வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு

சிவகங்கை மாவட்டத்தில் கோவில்களில் பொது விருந்து!

காரைக்குடியில் அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் பங்கேற்பு!

சிவகங்கை. பிப். 11–

பேரறிஞர் அண்ணா வின் 56வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று முன் தினம் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கோவில்களில் பொது விருந்து வழிபாடு நடைபெற்றது.

இதில் காரைக்குடியில் முத்துமாரியம்மன் கோயிலில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில்ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டார்கள்.

முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், இந்து சமய அறநிலையத் துறை மண்டல இணை ஆணையர் திருமதி பாரதி,உதவிஆணையர் கவிதா, எஸ். மாங்குடி எம்.எல்.ஏ. மாநகர துணை மேயர் நா. குணசேகரன் தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் திருமதி புவனேஸ்வரி இளங்கோவன் மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் வெள்ளையன், பேருராட்சி மன்ற தலைவர் கோகிலராணி நாராயணன் ,ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

தொடர்ந்து 300க்கும் மேற்பட்ட பெண்களுக்கு சேலையினை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் வழங்கினார். சிவகங்கை நகர் காசி விஸ்வநாதர் ஆலயத்தில் நகர் மன்ற தலைவர் சி.எம். துரை.ஆனந்த் தலைமையில் பொதுவிருந்து நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கண்காணிப்பாளர் வேல்முருகன், நிர்வாகிகள் முருகேசன், செந்தில் வேல் பாண்டியன், ஜெயகாந்தன், ராமதாஸ், உட்பட பொதுமக்கள் கலந்து கொண்டார்கள் நிகழ்ச்சி யில் பெண்களுக்கு சேலைகள் வழங்கப்பட்டது.கொல்லங்குடி அருள்மிகு வெட்டுடையார் காளி அம்மன் கோவில் தாய்மங்கலம் முத்துமாரியம்மன் கோயில் உட்பட மாவட்டத்தில் உள்ள பல்வேறு கோயில்களில் பேரறிஞர் அண்ணா நினைவு தினத்தை முன்னிட்டு பொதுவிருந்து நடைபெற்றது.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசை கண்டித்து சோழவந்தானில் நடைபெற்ற மாபெரும் கண்டன பொதுக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., தலைமையில் மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் அதலை பி.செந்தில்குமார், தலைமைக் கழக பேச்சாளர் தக்கோலம் தேவ பாலன் ஆகியோர் முன்னிலையில் சிறப்புரை ஆற்றிய போது எடுத்த படம். உடன் கழக நிர்வாகிகள் சத்திய பிரகாஷ், பால்பாண்டியன், ஜெயராமன், பசும்பொன்மாறன், பால ராஜேந்திரன், புதூர் சேகர், தன்ராஜ், முத்தையன், ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், பொரும்பு தனசேகர், பரந்தாமன், வெற்றிச்செல்வன், மருதுராஜா, ஸ்ரீதர், பெரியசாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், திரளான பொதுமக்கள் உள்ளனர்.

தேனி வடக்கு மாவட்டம்சார்பில் போடியில்தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிரான கண்டன பொதுக்கூட்டம்போடி நகர செயலாளர் புருசோத்தமன் தலைமையில் நடைபெற்றது. சரவணகுமார் எம்.எல்.ஏ. ஒன்றிய செயலாளர்கள் லட்சுமணன். அய்யப்பன். ரத்தின சபாபதி. சக்கரவர்த்தி. முருகேசன், எல்.எம்.பாண்டியன், நகர செயலாளர்கள் நாராயண பாண்டியன், முகமது இலியாஸ் ஆகியோர் முன்னிலவைத்தனர். மாநில செயற்குழு உறுப்பினர் சங்கர், மாநில பொதுக்குழு உறுப்பினர் ராஜா ரமேஷ், முன்னாள் நகர செயலாளர் மாவி செல்வராஜ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள். வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தலைமைக் கழக பேச்சாளர்கள் கவிஞர் தமிழ் தாசன், வயலூர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். போடி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் நேருபாண்டியன், பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் முத்துராமலிங்கம், மாவட்ட அவைத் தலைவர் பி.டி. செல்லப்பாண்டி, மாவட்ட துணை செயலாளர்கள் செந்தில்முருகன், கண்ணன், மாவட்ட பொருளாளர் சுரேஷ் மற்றும் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக மூத்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.